# வணிகம் 12

# VANIHAM

கலை - வர்த்தகம்

உள்ளே:-

பொருளியல்
வணிகமும் - நிதியும்
தமிழ்
கணக்கியல்
அளவையியல்
சிறுகுறிப்புத் தொகுப்புக்கள்
ஆங்கிலம்

வணிக சேவைகள் வெளியீடு
*COMMERCIAL SERVICES PUBLICATION*

மார்கழி
82

3-50

★ புதுவருட பொங்கல் நல்வாழ்த்துக்கள் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❁ இலங்கையில் சந்தாதாரர்களுக்கு அதிவிசேட சலுகைகளை வழங்கும் முதன்மை மிகு மாணவர் சஞ்சிகை.

**வணிகம்**

❁ க. பொ. த. உயர்தரப் பரீட்சைகளில் கலை, வர்த்தக, மாணவர்க்கு உற்ற துணையாக இருந்து உயர்கல்வியில் மறுமலர்ச்சியை உண்டாக்கிவரும் மாணவர்மாத இதழ்,

**வணிகம்**

❁ சந்தாதாரராகும் உங்களுக்கு அளப்பரிய இலவசசேவைகளை வழங்கிவரும் சஞ்சிகை,

# வணிகம்

இன்றே சந்தாதாரராகுங்கள்.

சந்தா விபரம்: – 6 இதழ்கள் ரூபா 20/-
12 இதழ்கள் ரூபா 40/-

6 இதழ்களுக்குக் குறைவாக சந்தா ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது:

தொடர்பு: *Editor*
VANIHAM
*113, Point Pedro Road,*
*Nallur - Jaffna.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No 63

M



## கம்பனிக் கணக்குகள் தொடர்: 4

# முன்னுரிமைப் பங்கு மீட்டல்

கு. குணசிங்கம் *B. Com. (Hons)*

பங்குகளால் வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகள் மூலதனத்தைச் சேகரிப்பதற்காக மீட்கத்தக்க முன்னுரிமைப்பங்குகளை வழங்குவதுண்டு. இத்தகைய பங்குகளை வழங்கும்போது மீட்கப்படும் காலம், மீட்பின்போது செலுத்தப்படும் வட்டம் என்பன குறிப்பிடப்படும். மீட்கத்தக்க முன்னுரிமைப்பங்குகள் தொடர்பாக பங்குகளால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் முக்கிய கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

1. இவ்வினப்பங்குகளை வழங்குவதற்கான அதிகாரம் அக்கம்பனியின் அமைப்புஅக விதியினுல் அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

2, பங்கிலாபத் தொகைதவிர்ந்த கம்பனியின் இலாபத்தில் இருந்து அல்லது மீட்கும் நோக்கத்திற்காகப் புதியபங்குகளை வழங்கிப் பெறும் பணத்திலிருந்து மீட்கப்படல் வேண்டும்.

3. பங்குகள் மீட்கப்படுவதற்கு முன்னர் அப்பங்குகள் முழுவதும் செலுத்தப்பட்டவையாக இருத்தல் வேண்டும்-

4. மீட்பின் போது செலுத்தப்பட வேண்டிய வட்டத் தொகை இலாபத்தில் இருந்து அல்லது பங்குவட்டக்கணக்கில் இருந்து ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

5. ஏதேனும் பங்குகள்பங்கிலாபத்தொகை தவிர்ந்த இலாபத் தொகையிலிருந்து மீட்கப்படின்அவ்வாறுஇலாபத்திலிருந்து மீட்கப்பட்ட பங்குகளின் முகப் பெறுமதிக்குச் சமமான தொகை ''மூலதன மீட்பு ஒதுக்க நிதி'' (C. R. R. F,) க்கு மாற்றப்படல் வேண்டும். அதாவது மீட்கப்பட்ட பங்குகளின் மொத்தமுகப் பெறுமதிக்கும் மீட்பதற்காக வழங்கப்பட்ட பங்குகளின் மொத்த முகப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் C.R.R,F.க்கு மாற்றப்படல் வேண்டும்,

மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை மீட்கும்போது பின்பற்றவேண்டிய சட்டவிதிமுறைகள் தொடர்பாக இலங்கை கம்பனிகள் கட்டளைச் சட்டம் 1938, ஆங்கிலச் சட்டம் (English Law) இலங்கைக் கம்பனிச் சட்டம்- *1982* என்பவற்றில் காணப்படும் முரன்பாடுகள் பற்றி மாணவர்கள் அறிந்திருத்தல் மிக முக்கியமானதாகும், எனினும் மாணவர்கள் ஆங்கில சட்டத்தை பின்பற்றியே விடையளித்தல் வேண்டும் என்பதுடன் இலங்கைக் கம்பனிகள் சட்ட விதிமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் படியான விளக்கத்தை அடிக்குறிப்பாக எழுதுதலும் வேண்டும்,

## இலங்கை கம்பனிகள் கட்டளைச் சட்டம்- 1938

இச் சட்டப்படி பங்குகளை மீட்கும் போது வட்டம் வழங்கப்படுமாயின் அவ் வட்டத்தொகை இலாபநட்டக் கணக்கில் பதி வழிக்க வேண்டும் எனவும், மீட்பின் போது மீட்பதற்காக வழங்கப்பட்ட புதிய பங்குகள் மூலம் பெறப்பட்ட பணத்தொகையை விட மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகைக்குச்சமமான தொகை பங்கிலாபத் தொகை தவிர்ந்த பகிரக்கூடிய இலாபத்தில் இருந்து C.R.R.F.க்கு மாற்றப்படல் வேண்டும் எனக்கூறுகின்றது. உ+மாக:மீட்கப்படவேண்டிய பங்குகளின் வட்டம் உட்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 10500/- எனவும் மீட்பதற்காக வழங்கிய பங்குகளின் மூலம் கிடைத்த தொகை ரூபா 6500/- எனவும் கருதின் C R.R.F. க்கு மாற்றவேண்டிய தொகைரூபா4000/-ஆகும். இச்சட்டத்தின் படிபங்குகளின் முகப் பெறுமதி கவனத்தில் எடுக்கப்படுவதில்லை.

## ஆங்கிலச்சட்டம்
## ENGLISH LAW

இச்சட்டமானது ,மீட்பின் போதுவழங்கப்படும் வட்டத்தொகையை இலாபநட்ட கணக்கில் இருந்து அல்லது பங்குவட்டக் கணக்கில் இருந்து பதுவழிக்கலாம்எனக்கூறுகின்றது. அத்துடன் C.R,R.F.க்கு மாற்ற வேண்டிய தொகையானது மீட்கப்படும் பங்குகளின் மொத்தமுகப் பெறுமதிக்கும் மீட்பதற்காக வழங்கப்படும். பங்குகளின் மொத்தமுகப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசத் தொகைக்குச் சமமான தொகையாக பங்கிலாபத் தொகை தவிர்ந்த பகிரக்கூடிய இலாபத்தில் இருந்து மாற்றப்படல் வேண்டும் எனவும் கூறுகின்றது. உ+மாக மீட்கப்படும் பங்குகளின் மொத்த முகப் பெறுமதி வட்டம் உட்பட ரூபா 25000/- எனவும் மீட்பதற்காக வழங்கப் பட்டபங்குகளின் மொத்தமுகப் பெறுமதி ரூபா 15000/- எனவும் கருதின் C.R.R,Fக்கு மாற்ற வேண்டிய தொகை ரூபா 10000/- ஆகும். இங்கு செலுத்தப்பட்ட பணஅளவு C.R.R.F. விடயத்தில்கவனத்தில் எடுக்கப் படுவதில்லை,

## இலங்கை கம்பனிகள் சட்டம் 1982

இச்சட்டமானது ஆங்கிலச் சட்டத்தில் கூறப்பட்ட விதி முறைகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

## கணக்கீட்டு பதிவுகள்

1. முன்னுரிமைப் பங்கு மூலதனக் கணக்கு மீதியை மீட்புக் கணக்கிற்கு மாற்றல். முன்னுரிமைப் பங்கு மூலதன கணக்கு வரவு முன்னுரிமைப் பங்கு மீட்புக் கணக்கு செலவு.

2. மீட்பின் போது வழங்க வேண்டிய வட்டத்திற்கு பங்குவட்டக்கணக்கு அல்லது இலாப நட்டக் கணக்கு வரவு முன்னுரிமைப்பங்கு மீட்புக்கணக்கு செலவு.

   குறிப்பு:- பங்குவட்டக் கணக்கில் மீதி இருப்பின் அதனை பயன்படுத்துதல் வேண்டும்

3. மீட்புக்காக புதிய பங்குகள் வழங்கப்படின் (வட்டத்துறை) காசுக்கணக்கு (வட்டம் உட்பட) வரவு பங்கு வட்டக் கணக்கு (வட்டம்) செலவு பங்கு மூல தனக்கணக்கு (முகப் பெறுமதி) செலவு

4. மீட்பிற்காகப் பணம் செலுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது முன்னுரிமைப் பங்கு மீட்புக் கணக்கு வரவு காசுக்கணக்கு செலவு.

5. ஆங்கிலச் சட்டப்படியான C.R,R.F, தொகைக்கு இலாப நட்டக் கணக்கு. பொது ஒதுக்கம் ஆகிய வருமான ஒதுக்கங்கள் வரவு.

மூலதன மீட்பு ஒதுக்கநிதி செலவு.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியவிடயத்தை மனங்கொள்ளல் வேண்டும். அதாவது பங்குகளை மீட்கும் போதுவீழ்ச்சியுறும் மூலதனத் தொகையானது C.R,R.F, தொகையினுல் ஈடு செய்யப்படுகின்றது. இவ்வாறு ஈடு செய்யப்படுவதற்கு வருமான ஒதுக்கங்கள் மூலதன ஒதுக்கமாக மாற்றியமைக்கப்படுகின்றன- மூலதன ஒதுக்கங்கள் பங்கிலாபமாகப் பகிரப்பட முடியாதவையாகும்-C,R.R.F. குறிப்பாக மூலதனகுறிப்பிற்கும் உபகாரப் பங்குகள் வழங்குவதற்கும் மட்டுமே பயன்படுத்தப் படல் வேண்டும். என்ற வரையறையைக் கொண்டதாகும்.

கடந்தகால பரீட்சை வினுத்தாள்களில் முன்னுரிமைப்பங்கு மீட்டல் உபகாரப்பங்கு வழங்கல் ஆகிய இரண்டையும் ஒன்று சேர்த்து வினுக்கள் இடம் பெற்றுள்ளன, மாணவர்கள் முன்னுரிமைப் பங்குகளை மீட்பதன் மூலம் C.R.R.F,ஐ உருவாக்கி அதன் பின்னரே உபகாரப் பங்குகளை வழங்குதல் வேண்டும், உபகாரப்பங்கு வழங்கப்படுவதன் மூலம் ஏற்படும் தொகையை ஈடுசெய்வதற்கு முதலில் மூலதன ஒதுக்கங்கள் முற்ருகப் பயன்படல் வேண்டும். எனவே C, R. R, F. முதலில் பயன்படுத்தப்படல் வேண்டும்,

## வங்கித் தொழிற் பங்குடமை:-

பங்குடமை சங்கம் அல்லது ஏதேனும் கூட்டுக்கள் புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ் பொதுக்கம்பனியொன்ருகப் பதிவு செய்யப்படாதவிடத்து அவை வங்கித்தொழிலைப் புரிதல் கூடாது எனப் பணிக்கப்பட்டுள்ளது, பழைய கம்பனிச் சட்டத்திற் காணப்பட்ட வங்கித் தொழிற்பங்குடமைகள் இங்கு விலக்கப்பட்டுள்ளன. அத்துடன் இலங்கைக்கு வெளியே உருவாக்கப்பட்ட பங்குடமை அல்லது சங்கம் அல்லது கூட்டு ஒன்று வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றின் எழுத்திலான சட்டத்தால் அல்லது அரச பட்டயத்தால் உருவாக்கப்படாத விடத்துஅவையும் இலங்கையில் வங்கித் தொழிலைப் புரிதலாகாது என விதிக்கப்பட்டுள்ளது.

---

## பணம், நாணயம்:-

பணம் என்பதுபொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்களுக்காக அல்லது பொருட்கள் சேவையின் பரிமாற்றத்திற்காக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சாதனங்கள் பணம் எனப்படும். இது சட்ட முறையான நாணயங்களையும் வங்கி பணங்களையும் குறிக்கும்.

நாணயம் என்பது பணநிரம்பலின் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது, இது அதியுயர் நிறுவனமான மத்திய வங்கியினுல் அச்சிட்டு வெளியிட்டிருக்கும் தாள். குத்தி நாணயங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I, M



# தரக் கட்டுப்பாடு (Quality Control)

தேவராஜன் ஜெயராமன் *B. Com. (Special)*
(இறுதி வருடம்) யாழ். பல்கலைக்கழகம்.

கடந்த வருட (1981) க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தரக்கட்டுப்பாடு சார்ந்த வினுக்கள் வணிகமும் நிதியும் பாடத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தன. மாணவர்க்கு தரக்கட்டுப்பாடு சார்ந்த பிரதான விடயங்களைத் தெளிவுபடுத்த இக் கட்டுரை மிகப்பயனுடையதாகும்.

ஆ-. ர்

ஆரம்பகாலத்தில் பொருட்கள் தனி ஒருவரால் அவரது நேரடிக்கண்காணிப்பில் உற்பத்தி செய்யப்பட்டன. இதனுல் அப் பொருளின் தரம் ஏறக்குறைய சிறப்பாகக் காணப்பட்டது. ஆனுல் இயந்திரங்கள்மூலம் பேரளவிலான உற்பத்தி மேற்கொள்ளப் படத் தொடங்கியதும் உற்பத்தியாளன் நேரடியாக ஒவ்வொரு பொருளின் மீதும் கவனத்தை செலுத்த முடியாததாயிற்று, அதேவேளையில் பொருளின் தரமானது சிற்ப்பாக இருக்கவேண்டும் என எதிர் பார்க்கப்பட்டது. இவ்வாறு பொருளின் தரத்தை தொடர்ந்து ஒரே நிலையில்வைத் திருப்பதற்காக கையாளப்படும் முறையே தரக்கட்டுப்பாடாகும். அதாவது உற்பத்தி நிறுவனம் ஒன்று தனது பொருள் தரமாக இருப்பதனை உறுதிப்படுத்த மேற்கொள் ளப்படும் ஒரு நடவடிக்கையே தரக்கட்டுப் பாடாகும். இன்று அநேகமாக கைத்தொழில் நிறுவனங்கள் தமது உற்பத்திப்பொருட்கள் மீது தரக்கட்டுப்பாட்டினை மேற் கொள்கின்றன. "தரக்கட்டுப்பாடு உற்பத்தி யாளன் சிறந்த பொருளை உற்பத்தி செய் யவும், நுகர்வோர் தரமான பொருளை நுகரவும் வழிவகுக்கிறது''.

தரக்கட்டுப்பாட்டினைக் கைக்கொள்வ தால் உற்பத்தியாளன் ஒருவன் பின்வரும் வழிகளில் நன்மையடைகிருன்.

1. உற்பத்தியாளன் தங்களுடைய நியம தரத்திற்கு (Standard Quality) ஏற்ப பொருட்களை உற்பத்திசெய்யக்கூடிய தாக இருக்கும்.

2. தரமான பொருளை உற்பத்தி செய்வ தன்ஊடாக பொருளின் தரம் உறுதிப் படுத்தப்படுகிறது. இதன்மூலம் பொரு ளின் நம்பிக்கைத்தன்மை (Reliability) உறுதிப்படுத்தப்படுகிறது,

3. பொருளுக்கு சந்தையில் கூடிய விற் பனை ஏற்பட்டு இதன்மூலம் நிறுவனம் கூடிய இலாபத்தை அனுபவிக்கக் கூடியதாக உள்ளது. இதனுல் நிறுவ னத்துக்கு நன்மதிப்பு ஏற்படுகிறது.

4. தரக்கட்டுப்பாட்டினூடாக தரமான பொருட்களைச் சந்தைக்கு விடவும். தர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற பொருளை நிராகரிக்கக்கூடியதாக வும் இருக்கிறது.

5. தரக்கட்டுப்பாட்டினூடாக பொருள் முடிவுப் பொருளாக மாறுவதற்கு முன்பே தரம் பரிசோதிக்கப்பட்டு தரத்தில் விலகிய பொருட்கள் நிராக ரிக்கப்படுகிறது. இதன் மூலம் நிறுவ னம் பெருமளவு நட்டத்தினை குறைக் கக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாறு உற்பத்தியாளனுக்கு தரக் கட்டுப்பாடு உதவுவது போல் நுகர்வோ னுக்கும் உதவுகிறது. பின்வரும் வழிகளில் இத்தரக்கட்டுப்பாடு நுகர்வோனுக்கு உத வுகிறது.

1. தரக்கட்டுப்பாட்டின் ஊடாக பொரு ளின் தரம் உறுதிப்படுத்தப்படுவதனுல் நுகர்வோர் தரமான பொருளை வாங் கக்கூடியதாக இருக்கின்றது.

2. தரக்கட்டுப்பாட்டினூடாக தரமான பொருட்கள் சந்தைக்கு அனுப்பப்படு வதால் நுகர்வோர் போலிப் பொருட் களில் இருந்து பாதுகாக்கப்படுகின்ற னர்

3. தரக்கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பொருட்களை நுகர்வோர் வாங்கிப் பாவிப்பதால் தரமான பொருட்களை நுகர்கிறேம் என்ற மன திருப்தியை பெறுகின்றனர்.

4. தரக்கட்டுப்பாட்டின் மூலம் நுகர் வோன் தரமான பொருட்களை நுகர் வதால் தான் கொடுக்கும் பணத்திற்கு சமமான பொருளை நுகரக்கூடியதாக உளது.

5. தரக்கட்டுப்பாட்டின் மூலம் தரமான பொருட்கள் சந்தைக்கு அனுப்பப்படு வதால் நுகர்வோர் பொருட்தெரிவில் கூடிய கவனத்தை செலுத்தவில்லை. இதன் மூலம் நுகர்வோன் இலகுவாக பொருட்தெரிவை மேற்கொள்ளக்கூடிய தாகவுள்ளது. இவ்வாறு தரக்கட்டுப் பாடானது நுகர்வோரையும் பாது காக்கின்றது.

## தரக்கட்டுப்பாடு மேற்கொள்ளும் முறை

உற்பத்தி நிறுவனங்கள் பல்வேறுமுறை களில் தரக்கட்டுப்பாட்டினை மேற்கொள் கின்றன. இந்நிறுவனங்கள் தரக்கட்டுப்பாட் டினை மேற்கொள்வதற்காக தரக்கட்டுப் பாட்டுப் பகுதியொன்றை தமது நிறுவனத் துள் அமைத்துக் கொள்ளும். இதற்குப் பொறுப்பாக ''தரக்கட்டுப்பாட்டாளர்'' (Quality Controller) ஒருவர் நியமிக்கப் படுவர். அவருக்கு உதவியாக தரக்கட்டுப் பாட்டு பரிசோதகர் (Quality Control Inspectors) நியமிக்கப்படுவர். இவர்களுக்கு தரப்பரிசோதனை (Quality Test) தொடர் பான பரிசோதனை உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் வழங்கப்பட்டிருக்கும் இவர்கள் இரு முறைகள் மூலம் பொருட களின் தரத் தைப் பரிசோதிக்கின்றனர் சில நிறுவனங் களில்தரக்கட்டுப்பாட்டாளர் பொருட்களின் தரத்தை பரிசோதிப்பதற்காக அப்பொருட் களை ஆய்வுகூடத்திற்கு எடுத்துச் சென்று பரி சோதிக்கின்றனர். இம்முறை பொதுவாக சிறிய உற்பத்தி நிறுவனங்களிலேயே கைக் கொள்ளப்படுகிறது. இம் முறையின் கீழ் எழுமாதிரியாக (Random) சிலபொருட்கள் குறிப்பிட்ட காலஇடைவெளிக்கு ஒருதடவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கப்பட்டு தரம் பரிசோதிக்கப்படு கிறது, நியமதரத்தில் இருந்து விலகிய பொருட்கள் உற்பத்தியில் இருந்தும் விலக்கப்படுகிறது. இவ்வாறு ஆய்வு கூடத்திற்கு எடுத்துச் சென்று தரத்தினை பரிசோதிக்கும் முறையானது அதிக நேரத்திற்கும் செலவுக்கும் வழிவகுப்பதால் இம்முறை பெரிதும் விரும்பப்படுவதில்லை.

டாரிய நிறுவனம் தரப்பரிசோதனையை (Quality Test) தொழிற்சாலையில் செய்வது வழக்கம் இதனால் உற்பத்தித் தடங்கலோ செலவில் அதிகரிப்போ ஏற்படமாட்டாது, தொடர்ச்சியாக உற்பத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கும். நிறுவனங்களில் குறிப்பிட்ட கால இடைவெளிக்கு அதாவது அரை மணித்தியாலம் அல்லது 45 நிமிடத்திற்கு ஒருதடவை எழுமாறாக குறிப்பிட்ட அளவு பொருட்கள் எடுக்கப்பட்டு உற்பத்திப் பொருளுக்கான தரக்கட்டுப்பாடு பல்வேறு நிலைகளில் வைத்து மேற்கொள்ளப்படும் தரத்தில் இருந்து விலகிய பொருட்கள் நிராகரிக்கப்படும் தரக் கட்டுப்பாட்டில் புள்ளிவிபர முறை பயன்படுத்தப்படுவது, வழக்கம் தரக்கட்டுப்பாட்டு வரைபடம் ஒன்று வரையப்பட்டு நியமதரத்தை (Standard Quality) கொண்ட அளவீடு அதில் குறிக்கப்பட்டிருக்கும், பின்பு எழுமாறாக எடுக்கப்படும் பொருட்களின் அளவீடுகள் இவ் வரைகோட்டில் குறிக்கப்படும். நியமதரத்தை விட கூடிய அல்லது குறைந்த தரத்தை கொண்ட பொருட்கள் எல்லாம் இவ் வரைகோட்டில் காட்டப்படும். நியமதரத்தை கொண்டபொருள் சராசரி பொருள் அதாவது தரமான பொருள் என ஏற்றுக் கொள்ளப்படும். ஏனைய பொருட்கள் தரத்தில் இருந்து விலகியவையாகக்கருதப்படும்.

## இலங்கை கட்டளை பணியகமும் தரக்கட்டுப்பாடும்.

(Bureau Of Ceylon Standard & Quality Control)

இலங்கையில் பொருட்களின் தரத்தை நிர்ணயிக்கவும் தரத்தை பரிசோதித்து அங்கீகாரம் வழங்கவும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனமே இலங்கை கட்டளைப் பணியகமாகும். இந் நிறுவனம் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் சேவை செய்வதனை நோக்கமாக கொண்டு இயங்குகின்றது. இக்கட்டளைகள்பணியகம் பொருட்களின் தரத்தினை பரிசோதித்து சரியானநியமதரம் கொண்டுள்ள பொருட்களுக்கு ஒரு சான்றிதழை வழங்கும், பின்பு இப் பொருட்களை உற்பத்தி செய்வோர் தங்களுடைய உற்பத்திப் பொருட்களில் 'S L S' என்ற அடையாளத்தை பொறிக்கலாம். S L S என்ற அடையாளம் இலங்கையின் தரத்திற்கு நிகரானது. (Sri Lanka Standard) என்பதைக் குறிக்கின்றது, முக்கியமாக நுகர் பொருட்களுக்கே (Consumer's Goods) இத்தகைய சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன,

உ+ம்:- யானைமார்க் குளிர்பானங்களுக்கு இச் சின்னம் வழங்கப்பட்டுள்ளது. போர்கான்ஸ் (Forhans) பற்பசை, டெல்மேஜ் ஜாம் (Delmege Jam) போன்ற பொருட்களுக்கு இவ் அடையாளம்வழங்கப்பட்டுள்ளது.

''SLS'' அடையாளம் இடப்பட்ட பொருள்கள் தரப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது என்பதன் கருத்தாகும்,

இப்பணியகமானது தரப்பரிசோதனையின் போது தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட குறிப்பிட்ட ஒரு பொருளை பரிசோதனை செய்வதற்கு சந்தையில் அதே பொருளைப் பெற்றுப் பரிசோதனை செய்து ஒப்படைக்கப்பட்ட பொருளின் தரத்துக்கு நிகராகச் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருளின் தரம் காணப்படுகின்றதா என உறுதி செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல்

# வருமானத்தின் வட்டப் பாய்ச்சல்

*A.* சிவநேசராஜா *B. Com. (Cey.)*

பொருளியல்கற்கின்றமாணவர்கள் அதனைப் பற்றியமுழு அறிவையும் ஓரளவு பெற்றுக் கொள்வதற்கு அடிப்படையாக பொருளாதாரத்தில் காணப்படுகின்றமுக்கிய துறைகளையும் அவற்றின் அம்சங்களையும் அவை எவ்வாறு இயங்குகின்றன என்பதையும், அவ் இயக்கங்களால் பொருளாதாரத்தில் இடம்பெறுகின்ற மாற்றங்களையும் தெரிந்து கொள்வது முக்கியமானதாகும். இந்த நோக்கங்களை அறிந்துகொள்வதற்கு இக் கட்டுரை ஓரளவிற்கு உதவும்.

---

ஒரு நாட்டில் இயங்குகின்ற பொருளாதாரத் துறைகள் எவை? அவைகளுக்கிடையிலான பொருளாதாரத்தொடர்புகள் என்ன? அவற்றிற்கு இடையில் ஏன் பண ஓட்டம் நிகழ்கின்றது? அத்துறைகள் எப்படித் தங்களது வருவாயைப் பெற்றுக் கொள்கின்றன? அவற்றை எவ்வாறு செலவு செய்கின்றன? என்பன போன்ற வினக்களுக்கு விடையளிக்க முற்படும்போது பொருளியலில் வருமானத்தின் சுற்றோட்டத்தை அல்லது வட்டப்பாய்ச்சலை இலகுவாக விளக்கிக்கொள்வதற்கேற்ற அறிவைப் பெறலாம். ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பையும் அவ்வமைப்போடு இணைந்த துறைகளையும் அத்துறைகளின் இயக்கங்களையும் காட்டுவதோடு அவ் இயக்கங்களில் பணம் எவ்வாறு பங்குகொள்கின்றது என்பதையும் வருமானத்தின் வட்டப்பாய்ச்சல் ஊடாக இதனை விளக்கிக்கொள்ளலாம். இதனை இன்னும் ஒரு எளிமையான பொருளாதார அமைப்பூடாக விளக்குவது மிகவும் இலகுவானது எளிய பொருளாதார அமைப்பு என்பது ஒரு நாட்டில் உற்பத்தித் துறையும் நுகர்வுத்துறையும் பிரதானமாக இயங்குகின்ற பொருளாதார அமைப்பாகும். எனவே அங்கே அரசாங்கத் தொடர்பும் வெளிநாட்டுதொடர்பும் விலக்கப்பட்டடிருக்கும் அரசாங்கத் தொடர்பு விலக்கப்பட்ட பொருளாதார அமைப்பில் அரசாங்கத்தின் பொதுச் செலவுகள்- மானியச் செலவுகள் இடம் பெற்றிருக்காது: அத்தோடு வருமானங்களைப் பெறுவதற்காக அரசாங்கம் வரிகளை அறவிடுவதற்கும் சந்தர்பமிராது: வெளிநாட்டுத் தொடர்பு அற்று இருப்பதால் இத்தகைய பொருளாதார அமைப்பில் இறக்குமதி ஏற்றுமதி நடவடிக்கைகள் இடம் பெற்றிருக்காது. எளிய பொருளாதார அமைப்பிலே அரசாங்கத் துறையும் வெளிநாட்டுத் துறையும் தவிர்க்கப்பட்டிருக்கின்றன, அங்கு இருதுறைகள் மாத்திரம் காணப்படும்:

(1) நுகர்வுத் துறை அல்லது வீட்டுத்துறை,


(2) உற்பத்தித்துறை அல்லது நிறுவனத்துறை.

உற்பத்தித்துறை நுகர்வுத் துறைக்குத் தேவையான பொருட்கள் சேவைகளை உற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தி செய்து வழங்கும்: உற்பத்தி செய்வதற்கு ஏதுவான ஆக்கக் காரணிகளான நிலம் உழைப்பு, மூலதனம், அமைப்பு என்பவற்றை நுகர்வுத்துறை உற்பத்தித்துறைக்கு வழங்கி வாடகை, கூலி, வட்டி, இலாபம், என்பனவாக தனது வருமானத்தை ஈட்டிக் கொள்ளும், வீட்டுத்துறை தான் பெற்ற வருமானங்களை நிறுவனத்துறையால் உற்பத்தி செய்து முடிக்கப்பட்ட பொருட்கள் சேவைகளை நுகர்ந்து கொள்ளப் பயன்படுத்தும். இதனை வருமானச் சுற்றோட்ட வரைபடத்தினூடாக இலகுவாக விளங்கிக்கொள்ளலாம்.

பின்வரும் வரைபடம் (1) வட்டப்பாய்ச்சலைக்காட்டுகின்றது.




ஒருதுறை பெறுகின்ற வருவாய் இன்னொரு துறையின் செலவுகளேயாகும். அதாவது ஒரு துறையின் செலவுகளே மறு துறைக்கு வருமானத்தை நிகழ்த்துகின்றது, மறுபுறமாகக் கூறினல் ஒரு துறைக்கு செலவாகச் சென்றடையும் பணம் அத்துறைக்கு வருமானமாக வருவதற்கிடையில் இன்னொரு துறைக்கு வருமானமாகவும் செலவாகவும் மாற்றமடைந்திருக்கும்.

வீட்டுத்துறை நிறுவனத் துறையிடமிருந்து பெற்ற ருமானத்தை முழுதாக செலவிடாதவிடத்து வருமானத்தில் ஒருபகுதி நுகர்வு செய்யப்படாதிருக்கும். வீட்டுத்துறை தனது வருவாயின் ஒரு பகுதியை நுகர்வு செய்யாமல் சேமிப்பாக வைப்பதனல் நிறுவனத்துறையிடமிருந்து நுகர்வுசெய்யும் பொருட்கள்சேவைகளின் அளவு குறைக்கப்படும். வீட்டுத்துறையி பொருட்கள் சேவைகளின் நுகர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைக்கப்படுவதனால் குறைந்தளவுபொருட்கள் சேவைகளையே நிறுவனத்துறை உற்பத்தி செய்யவேண்டிய அவசியம் பொருளாதாரத்தில்ஏற்படும். அப்படியாயின்நிறுவனத் துறை குறைந்தளவு பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக வீட்டுத்துறை குறைந்தளவான ஆக்கக்காரணியையே உற்பத்திக்காக வழிப்படுத்தும். எனவே வீட்டுத்துறை தனது வருமானத்தின் ஒரு பகுதியை சேமித்துக்கொள்வதால் வருமானத்தின் வட்டப் பாய்ச்சலானது சுருங்கிய நிலையில் சென்றுகொண்டிருக்கும்.


வருமானத்தின் வட்டப் பாய்ச்சலில் சுருக்கத்தை நிகழ்த்துவதற்கு அரச வரி விதிப்பும் சார்பாகக் காணப்படுகின்ற நிலமையும் பொருளாதாரங்களில் உண்டு. எனவே நாம் முன்னர் இலக்கணப்படுத்திய எளிய பொருளாதார அமைப்புடன் அரசாங்கத் தொடர்பினை இணைத்தே வருமான சுற்றோட்டத்தினை நோக்க வேண்டியுள்ளது. அரசாங்கத்தின் வரிவிதிப்பு வீட்டுத் துறைக்கு நேர் வரிகளாயும் உற்பத்தி துறைக்கு உற்பத்தி வரிகளாயும் அமையும். இதனால் வீட்டுத் துறையும் உற்பத்தி துறையும் தங்களது வருமானத்தின் ஒரு பகுதியை வரிக்காக விட்டுக் கொடுக்கின்ற நிலமையில் பொருளாதாரத்தில் குறிப்பிட்டளவு பணம் இயக்கப்படுவது தவிர்க்கப்படும்.

வீட்டுத் துறைக்கு நேர் வரி விதித்தால் இத்துறை நுகர்வுகளான பொருட்கள் சேவைகள் குறைவடைந்து உற்பத்தித் துறையின் வருமானமும் உற்பத்தியும்பாதிக்கப்படும், உற்பத்தி குறைந்து செல்லும் போது குறைந்தளவு ஆக்கக்காரணிகளையே வீட்டுத்துறை வழங்கவேண்டியிருக்கும், உற்பத்தி வரிகளை உற்பத்தி துறைக்கு விதிக்க உற்பத்தி துறைகள் வரி அதிகரிப்பால் உற்பத்தியை குறைத்துக் கொள்ளும் குறைந்த உற்பத்திக்காக குறைந்த ஆக்க காரணிகளையே வீட்டுத்துறையிடமிருந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கும். இது வீட்டுத் துறையின் காரணி வருமானங்களை சுருங்கச் செய்யும்.

ஒரு நாட்டின் இறக்குமதிகள் எவ்வாறு வருமானச் சுற்றோட்டத்தில் தாக்கத்தை நிகழ்த்துகின்றதென்பதனை விளக்குவதற்கு மேற் கூறப்பட்ட அம்சங்களுடன் வெளிநாட்டுத் தொடர்பையும் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியுள்ளது. இறக்குமதிகளால் வீட்டுத்துறையின் வருமானத்தின் ஒரு பகுதி நிறுவனத்துறைக்குச் சென்றடையாது விடுவதால் நிறுவனத்துறை தனது உற்பத்தியைக் குறைத்து குறைந்த ஆக்ககாரணிகளையே வீட்டுத் துறையிடமிருந்து பெற்றுக் கொள்ளும் இதனால் வீட்டுத் துறையின் வாடகை, கூலி, வட்டி, இலாபம் என்பன குறைவடையும். இவ்வாறு சேமிப்பு, வரி விதிப்பு, இறக்குமதி என்பன பொருளாதாரத்தில் உற்பத்தித் துறையினது உற்பத்தியை குறைக்கப்படும் காரணிகளாக அமைந்து விடுவதாலேயே வருமானச் சுற்றோட்டம் சுருங்கிச் செல்கிறது. இது பொருளாதாரத்தில் வேலையில்லாப் பிரச்சனை, தேசிய உற்பத்திக்குறைவு, குறைந்தளவான நுகர்வு வாழ்க்கைத் தரக்குறைவு என்பனவற்றிற்கு வழிவகுக்கும். இதனை பின்வரும் படத்தினூடாக விளங்கிக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வரைபடம் 2)




வருமானச் சுற்றோட்டம் எவ்வாறு விரிவடைகிறது அதனால் ஏற்படும் பொருளாதார மாற்றங்கள் எவை? என்பவைகளை நோக்குவோம். வருமான ஓட்ட விரிவிற்கு பொருளாதாரத்தில் மேலதிக பணம் சுற்றோட்டத்தில் இடம் பெறவேண்டும். முதலீடுகளை மேற்கொள்வதனாலேயே மேலதிக பணம் சுற்றோட்டத்தில் இடம் பெறுகின்றது. நிறுவனத்துறையின் முதலீடுகள் உற்பத்திகளை அதிகரிக்கும். இதற்காக வீட்டுத்துறை மேலதிகமாக நிலம் உழைப்பு மூலதனம் அமைப்பு என்பனவற்றினை நிறுவனத்துறைக்கு வழங்கும் இதனால் வீட்டுத்துறையின் வருமானம் அதிகரிக்கப்படும். வீட்டுத்துறை அதிகளவில் பொருட்கள் சேவைகளை நுகர்வதும் வாய்பாக இருக்கும் இவ்வித வாய்ப்பை நிறுவனத்துறை. முதலீடுகளால் உற்பத்தி செய்யப்பட்ட மேலதிக உற்பத்தியை வழங்கிப் பயன்படுத்தும். எனவே முதலீடுகளால் இருதுறைகளினதும் செலவீடுகளும் வருமானங்களும் அதிகரித்து வருமான வட்டப் பரய்ச்சலை விரிந்த நிலைக்குத் தள்ளும். ஒரு பொருளாதாரத்தில் முதலீடுகளும் சேமிப்புக்களும் ஒரே நேரத்தில் இடம்பெற்றால் எவ்வாறான பொருளாதார மாற்றம் நிகழும் என்பது அப்பொருளாதாரத்தின் இயக்கத்தில் சேமிப்பு முதலீடுகளின் தாக்கம் எவ்வகையில் இடம்பெற்றிருக்கின்றது. என்பதனைபொறுத்திருக்கும். சேமிப்புக்களைவிட- முதலீடுகளின் பெறுமதி அதிகரித்துக் காணப்பட்டால் வருமானச் சுற்றோட்டம் விரிவடையும் சேமிப்புக்கள் முதலீடுகளைவிட அதிகரித்துக் காணப்பட்டால் வருமானச் சுற்றோட்டப் சுருக்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்.

வெளிநாட்டுப் பொருளாதார உறவு. காணப்படுகின்ற பொருளாதாரத்தில் நிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனத்துறை ஏற்றுமதி செய்து வருமானங்களை பெற்றுக் கொள்ள வாய்ப்பு காணப்படும். நிறுவனத்துறை ஏற்றுமதிக்காக உற்பத்திகளை அதிகரித்துக் கொள்வதற்கேற்ப அதிகரித்த காரணிச் சேவைகளை நிறுவனத்துறை வீட்டுத்துறையிடமிருந்து பெறவேண்டியிருக்கும். இதனால் வீட்டுத் துறையினது காரணி வருமானங்கள் உயர்ந்து செல்லும். இதனால் பொருளாதாரத்தில் பண ஓட்டம் விரிவடையும். வெளிநாட்டுத் தொடர்புடைய பொருளாதாரத்தில் இறக்குமதியும் பிரதான பகுதியாகக் காணப்படுவதால் தனித்து ஏற்றுமதியால் மாத்திரம் வருமானச் சுற்றோட்டம் விரிந்து செல்லும். எனக் கூறமுடியாது. ஏற்றுமதிப் பெறுமதி உயர்ந்தும் இறக்குமதியின் பெறுமதி குறைந்தும் காணப்பட்டால் சுற்றோட்டம் விரிந்தும் இறக்குமதியின் பெறுமதி உயர்ந்தும் ஏற்றுமதி பெறுமதி குறைந்தும் காணப்பட்டால் வருமானச் சுற்றோட்டம் சுருங்கியும் செல்லும். இரு பெறுமதிகளும் மாறாதிருந்தால் சுற்றோட்டம் சமமான பெறுமதியிலும் சென்று கொண்டிருக்கும்.

அரசாங்கத் தொடர்புள்ள பொருளாதாரமொன்றில் அரசாங்கம் பொதுச்செலவுகளை மேற்கொள்ளுகின்ற போது அதாவது மானியங்களை வழங்குகின்ற போது அவை வருமானச் சுற்றோட்டத்தில் விரிந்த தன்மையைக் கொடுக்கும். பொதுச் செலவுகளால் வீட்டுத் துறையினரின் வருமானத்தில் ஒருபகுதி பாதுகாக்கப்படும், இவ்வாறு வீட்டுத்துறைக்கு அரசாங்கத் துறை இலவச சேவைகளை நடாத்துவதால் அச்சேவைக்கு மாற்றாக பணம் செலுத்த வேண்டியதில்லை. இது வீட்டுத் துறையானது பொருட்கள் சேவைகளின் நுகர்வுச் செலவுகளை அதிகரித்துக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அப்படியாயின் நிறுவனத் துறையும் பொருட்கள் சேவைகளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியிருக்கும். இதனால் நிறுவனத் துறைக்குக் கூடுதலான உற்பத்தி காரணிகளை வீட்டுத் துறை வழங்கி கூடிய வருமானங்களை பெற்றுக் கொள்ளும் உற்பத்தி துறைக்கு அரசு மானியத்தை வழங்க உற்பத்தித்துறையின் உற்பத்திச் செலவு குறையும். உற்பத்திச் செலவு குறைவடைய நிறுவனத்துறையின் உற்பத்திகள் அதிகரிக்கப்படும். நிறுவனத்துறை தனது உற்பத்திகளை அதிகரிப்பதற்கு சார்பாக வீட்டுத்துறை மேலதிக காரணிச் சேவைகளை வழங்க வேண்டி இருக்கும். இதனால் வீட்டுத்துறையின் காரணி வருமானங்கள் வளர்ந்து செல்லும். இவ்வாறு ஒவ்வொரு துறையினது செலவுகளும் வருமானங்களும் உயர்ந்து செல்கின்ற நிலையையே விரிந்த வருமான வட்டப்பாய்ச்சல் என்கின்றோம். விரிந்த வருமான வட்டப்பாய்ச்சல் இயங்குகின்ற பொருளாதாரத்தில் நிறுவனத் துறையின் தேசிய உற்பத்தி அதிகரிப்பிற்கேற்ப நாட்டில் பூரண வேலை வாய்ப்பு நிலவும். நுகர்வுச் செலவு குறைந்து காணப்படும். பொருட்கள் சேவைகள் மலிந்து வளர்ச்சியுடன் இயங்குகின்ற பொருளாதாரமாக காணப்படும்.

## உறவுக் கம்பனிகள்

புதிய கம்பனிச் சட்டத்தின் ஐந்தாவது பகுதியில் உறவுக்கம்பனிக்கான விளக்கமானது ஒரு கம்பனியின் துணைக்கம்பனி அல்லது பிடிப்புக்கம்பனி அல்லது பிடிப்புக் கம்பனியின் துணைக்கம்பனி உறவுக்கம்பனி என வழங்கப்பட்டுள்ளது.

# எழுத்துத் தமிழிற்காணப்படும் பொதுவான வழுக்கள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இது எழுவாய் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகளுள் ஒன்று, ஒரு தொடையாக வரும் பெயர்களுள் முதலாவதையேனும், முதல் இரண்டொன்றையேனும் கூறி, எஞ்சியவற்றையும் தழுவிக் கொள்ள வேண்டியவிடத்து 'ஆதியன' என்றோ, 'முதலியன' என்றோ எழுதுவதே வழாநிலையாகும்: உ+ம்: நால் வேதங்களாவன இருக்கு ஆதியன; நானிலங்களாவன குறிஞ்சி முதலியன. இவ்விடங்களில் 'ஆகியன' என்ற சொல்லை வழங்குவது வழுவாம் ஒரு தொடையாக வரும் பெயர்கள் எல்லாவற்றையும் கூறியபின் அவற்றைத் தொகுத்துச் சுட்ட வேண்டியவிடத்தே 'ஆகியன' அல்லது 'என்பன' என்ற சொல்லை வழங்க வேண்டும். உ-ம்; குறிஞ்சி, முல்லை, பாலை மருதம், நெய்தல் ஆகியன ஐந்திணைகளாம் அறம், பொருள், இன்பம், வீடு என்பன புருடார்த்தங்கள் எனப்படும். இவ்விடங்களில் 'ஆதியன' என்றோ 'முதலியன' என்றோ எழுதுவது வழுவாகும் ''சுழனிலை காட்டி, செனன் பளிச்சி, திக்கர் நேரங்காட்டி ஆதியன குறுநேர இடைகளை அளக்கும் உபகரணங்களாகப் பயன்படல்'' (க. பொ. த. (உயர்தரம்) திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டங்கள்- பௌதிகவியல் ''நேர அளவீடு'' பக்கம் 1). ஒரு பாடத் திட்டத்தில் இவ்வாறு வருவது மயக்கம் விளைப்பதாயுள்ளது. இங்கே எடுத்துக் கூறப்பட்டவை தவிர, இவை போல்வன பிறவும் உள எனுங் கருத்தை தருவதால், பாடத்திட்டம் திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை.

ஒவ்வொன்று: ஒவ்வொரு என்பது இச்சொல்லின் பெயரடை வடிவமாகும். 'ஒவ்வொன்று' என்பது சிறுபான்மை ஒரோவொன்று, ஒரொன்று என்றும் வழங்கும் இவை முறையே 'ஒரோவொரு', ஒரொரு என்ற பெயரடை வடிவங்களைப் பெற்று வரும். 'ஒரோவொருவர்', 'ஒரொருவர்' என்ற பெயர்ச் சொற்களும் இவற்றினடியாகத் தோன்றும். 'ஒவ்வொன்று' என்பது ஒருமைச் சொல்லா, பன்மைச் சொல்லா என்பதில் அறிஞர் பலர் தடுமாற்றமுறுகின்றனர். ஆங்கில மொழியில் each அல்லது every என்னும் சொல்லுக்குத் தமிழில் இச்சொல்லே நேரொத்த சொல்லாயிருப்பதால், ஆங்கிலத்திற் போலவே தமிழிலும் இச்சொல் ஒருமையையே உணர்த்தும் என்று அன்னார் மயங்குகின்றனர். மாணவர் பொருட்டுத் தமிழ் இலக்சண நூல் எழுகியோர் சிலர் 'ஒவ்வொரு' என்பது ஒருமைச் சொல்லே என்றும், அதனைப் பன்மைச் சொல்லாக வழங்குவது வழுவாம் என்றும் அறுதியிட்டு எழுதியுள்ளனர். அவர்களது மூளையில் ஆங்கிலம் ஒதுங்கியிருப்பதே இதற்குக் காரணமாகும். ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தின் தாக்கத்துக்கு ஆளாகாத தமிழ்ச் சான்றோர் இச்சொல்லைப் பன்மைப் பொருளிலேயே வழங்கியுள்ளனர். இங்கே சில உதாரணங்களை எடுத்துக் காட்டுவோம். பிரயோகவிவேகம் என்னும் இலக்கண நூலின் ஆசிரியரான சுப்பிரமணிய தீட்சிதர் "இவ்வாறு மெய்ப்பாட்டியலுள்ளும் தண்டியலங்கார சூத்திரத்துள்ளும் ஒவ்வொரு சொற்களைப் பிரித்துப்பிரித்துக் கூறுவர்" (பிரயோக, ஆறுமுகநாவலர் பதிப்பு, சூத்திரம் 50, உரை) என்றும்: சிவஞான பாடியம் இயற்றிய சிவஞான முனிவர் "ஒவ்வொரு கற்பங்களின் ஒவ்வொரு குணம் மேற்பட்டு நிகழும்", (முதற் சூத்திரம் 2 ஆம் அதிகரண உரை, கழகப்பதிப்பு, பக். 81), "பாரதத்திலும் ஒரோரிடங்களின் அங்ஙனங் கூறுவனவற்றையும் இவ்வாறே பொருளுரைத்துக் கொள்க" (ஷ பக். 83) என்றும்: பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் "தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு பெரிய நகரங்களிலும் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு உண்டி உடை முதலிய உதவிகளைச் செய்து..." (உரை நடைக்கோவை, இரண்டாம் பகுதி பக். 29) என்றும் வழங்கியுள்ளமை கவனிக்கத்தக்கது.

இனி சொல்லமைப்பை நோக்கினும் ஒன்று என்பதன் இரட்டித்தவடிவமே (அதாவது, ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று 'ஒவ்வொன்று' ஆதலால் அது பன்மைப் பொருண்மையே உடையது என்பது தெளிவாகும். நன்னூலுக்கு விருத்தியுரை இயற்றிய சங்கர நமச்சிவாயரும் "ஒவ்வொன்று கொடுவென்றால், இம்முறையே பலவற்றையுங் கொடுவெனப் பொருள் தந்து நிற்றலின்" ...... (நன்னூல், சூத்தி. 199, உரை) என்று இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார். ஆகவே சென்னைத் தமிழ் அகராதி இச்சொல்லுக்கு 1. ஒன்று வீதம் (அதாவது, ஒன்று ஒன்றாகப் பல), 2. சில என்ற பொருள்களை குறித்துள்ளது. "ஒன்று வீதம்" என்ற பொருளிலே இச்சொல் "எல்லாம்" என்ற பொருள்பட வருதலே பெரும்பான்மை வழக்கு: உம்: நாம் ஒவ்வொரு நாளும் உணவு உண்கிறோம். (எல்லா நாளும் என்பது கருத்து). இவ்வாறு வழங்கும் போது ஒவ்வொரு என்ற சொல்லினால் தழுவப்படும் பெயர்ச்சொல் முற்றும்மைபெற்றுவரும். முற்றும்மைபெறாது வருமிடத்து இது 'சில' என்ற பொருளைத் தரும். உ–ம்: அந்த எண்களில் ஒவ்வொன்று (=சில) விடப்பட்டிருக்கும். ஆதலால் ஆங்கில வழக்கும் தமிழ் வழக்கும் வேறு வேறு என்பதை அறிதல் வேண்டும்.

ஓரிரண்டு (ஓரிரு) இச்சொல் இரண்டு (இரு) என்றே பொருள்படும். இதிலுள்ள 'ஓர் என்பது' ஒன்று' என்பதன் திரிபேயாயினும் அடுத்துவரும் சொல்லின் பொருளை வேறுபடுத்தாமல், வெறும் அசைச் சொல்லளவிலே நிற்கின்றது. ஒரு நூறு, ஓரைந்து என்ற வழக்குகளையுங் காண்க. "வெள்ளம் ஓரிண்டென விரிந்த சேனையை" (கிட்சிந்தா 837) "அரக்கர்', ஓரிருவரோடும்" (ஆரணிய, 765 என்ற கம்பருடைய ஆட்சிகளில் வைத்து. இச்சொல்லின் பொருளைத் தெரிந்து கொள்ளலாம். ஆயினும், ஆங்கில மரபிலே சில என்று பொருள்படும் "one or two" என்ற தொடரைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுவோர் பலர் 'ஓரிரண்டு' (ஓரிரு) என்று பொருத்தமில்லாது எழுதுகின்றனர். 'நாலைந்து' நாளில் வந்துவிடுவேன்' என்று ஒருவர் சொல்லும்போது நாலு அல்லது ஐந்து நாள்' என்னும் கருத்து தோன்றுவதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டே 'ஓரிரண்டு' என்பதும் 'ஒன்று அல்லது இரண்டு' எனப் பொருள்படுமென அன்னார் கருதியுள்ளனராகலாம். I shall be back in one or to days என்ற ஆங்கில வாக்கியத்தை "நான் ஓரிரு நாட்களில் திரும்பி விடுவேன்" என்று எழுதுகின்றனர். வேறு சிலர் "one or two days" என்பதைச் சொல்லுக்குச் சொல்லாக மொழிபெயர்த்து "ஒன்று அல்லது இரண்டு நாட்களில்" என்றோ "ஒரு அல்லது இரு நாட்களில்" என்றோ எழுதுகின்றனர். இவ்வாறு எழுதுவது தமிழ் வழக்காகாது. இவ்வாறு வரும் இடங்களில் இரண்டொரு என்று வழங்குவதே மரபாகும். 'இரண்டொன்று' என்னுஞ்சொல் 'சில' என்றே பொருள்படுவதால், மேற்சொன்ன ஆங்கில தொடருக்கு ஒத்த பதமாக இதனைக் கொள்ளலாம். சென்னைத் தமிழ் அகராதி 'இரண்டொன்று' என்னும் சொல்லுக்கு one or two; a few; சிலஎன்னும் பொருளைக் குறித்திருப்பதுங் காண்க.

தவிர, தவிர்த்து; 'தவிர' என்பது 'தவிர்(தல்) என்னும் தன்வினையடியாகப் பிறந்த செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்; 'தவிர்த்து' என்பது தவிர்(த்தல்) என்றும் பிறவினையடியாகப் பிறந்த செய்து வென்னும் வாய்பாட்டு வினையெச்சம், இவற்றுள் முன்னது 'நீங்க' என்னும் பொருள்படும். ஆதலால் 'தவிர என்பது எழுவாய் வேற்றுமை (சொல்லையடுத்தும் 'தவிர்த்து என்பது இரண்டாம் (செயப்படுபொருள்) வேற்றுமைச் சொல்லையடுத்தும் வருதல் வேண்டும்: உ-ம்: இது தவிர வேறு ஒரு பொருளும் என்னிடம் இல்லை; உறுப்பினருள் ஒருவர் தவிர ஏனை எல்லோருஞ் சமூகம் அளித்துள்ளனர். இவ்வுதாரணங்களில் 'இது' என்ற பெயரும், 'ஒருவர்' என்ற பெயரும் முதல் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை) வடிவத்தில் அமைந்துள்ளமை காண்க, இதனைத் தவிர்த்து இன்னுமொரு துணிவாங்கு; பகுத்தறிவுள்ள மக்களைத் தவிர்த்து மற்றை உயிருள்ளவற்றையும் உயிரில்லாதவற்றையும் அஃறிணையென வகுத்தனர் தமிழ் இலக்கணகாரர். இவ்வுதாரணங்களில் 'இதனை, என்பதும் 'மக்களை என்பதும் தவிர்(த்தல்) என்னும் (செயப்படுபொருள் குன்றாத வினைக்குச்செயப்படு பொருளாய் வந்துள்ளமை காண்க. இச்சொற்களை இவ்வாறு வழங்குவதே தமிழ் இலக்கணத்துக்குப் பொருந்துவதாகும். ஆயினும், இக்காலத்திற் பலர் "அவனைத் தவிர எல்லாரும் வந்தனர்". "அவர்பாற் பற்றுள்ளோர் எழுதி வைத்த கதையை தவிர வேறு பொதுவான புறச்சான்று ஏதுங் காண்கிலேம்" (மறைமலையடிகள் ; "ஓலையைத் தவிர வேறு ஒரு பயனையுந் தாராத பனை வகை" என்று செயப்படுபொருட் சொல்த் தழுவுமாறு 'தவிர' என்னுஞ் சொல்லை ஆளுகின்றனர். இதற்கு ஆங்கில வழக்கே காரணமாயிருக்கலாம். ஆங்கிலத்தில் 'தவிர' என்ற பொருளைத் தரும் 'except என்னும் இடைச்சொல் இரண்டாம் வேற்றுமைச் சொல்லைத் தழுவுவது மரபு. இந்த ஆங்கில வழக்கு மூளையிற் குடிபுகுந்து இருப்பதாற்போலும் மறைமலையடிகள் போன்ற தமிழ் அறிஞரும் ஒரோவழி இச்சொல்லைத் தவறாக வழங்கியுள்ளனர்,

இனி, தவிர்ந்த, தவிர்த்த என்னும் பெயரெச்சங்களை வழங்குமிடத்தும் மேற்சொன்ன விதி கருத்திற் கொள்ளப்பட வேண்டும்: உ-ம் மக்கள் தவிர்ந்த உயிர்கள் எல்லாம் அஃறிணையின் பாற்படும்: மக்களைத் தவிர்த்த மற்றை உயிர்களை அஃறிணைக்கண் அடக்குவர். மககளைத் தவிர்ந்த என்று எழுதுவது வழுவாமெனக் கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயத் தொடை (Syllogism)

K. T. இராசரத்தினம் B. A. (Hons)

❋ இக் கட்டுரையில் அறுதி நியாயத் தொடையும் அத்துடன் சம்மந்தப்பட்ட விளக்கங்களுமே இடம்பெறுகின்றது.

பொதுவான அம்சமொன்றை உடைய துவும் தம்முள் ஒன்றுநிறை எடுப்பாக உள்ளதுமான இரண்டு எடுப்புக்களில் இருந்து தர்க்கரீதியில் பிறிதோர் முடிவெடுப்பைப் பெறும் நெறியே நியாயத்தொடை அனுமானம் எனலாம்.

உ-ம் :- மனிதர் அனைவரும் இறக்கும் இயல்பு உடையவராவார்.
அரிஸ் ரோட்டில் ஒரு மனிதன் ஆவான்.

ஆகவே அரிஸ் ரோட்டில் இறப்பவனுவான்.

மேற்காட்டிய வாதவடிவத்தில் 'ஆகவே' என்பதற்கு மேலே உள்ள இரண்டு எடுப்புக்களில் ஒன்று நிறை எடுப்பாக உள்ளது. இவ்விரு எடுப்புக்களும் பொதுவான அம்சமாக உள்ள 'மனிதர். என்ற பதமே 'அரிஸ் ரோட்டில் இறப்பவனுவான். என்ற முடிவைப் பெறுவதர்க்கு காரணமாக உள்ளது. என்பதைக் காண்க

ஒவ்வொரு நியாயத் தொடையிலும் பொதுக் கருத்தினைத் தெரிவிக்கும் எடுப்பு அப்பொதுக் கருத்தின்கீழ் ஒரு நிகழ்ச்சியை தெரிவிக்கும் எடுப்பு, முடிவு, போன்றவை இருக்கும். இவ்வகையில் நியாயத்தொடையில் 'பொதுக் கருத்து விதி' (The Prnciple of Subsumption is used) பயன்படுகிறது. அதாவது தனி நிகழ்ச்சியை ஒரு பொதுக் கருத்துக்கு உட்படுதல் என்ற விதியை தன்னகத்தே கொண்டுள்ளது.

## அறுதி நியாயத்தொடை
## (CATEGORICAL SYLLOGISM)

### 1. அறுதி நியாயத் தொடையின் அமைப்பு (STRUCTURE) :-

அறுதி நியாயத்தொடை இரண்டு அறுதி எடுப்புக்களை எடு கூற்றுக்களாகவும் ஒரு அறுதி எடுப்பை முடிவாகவும் கொண்டமைந்திருக்கும். மத்திப பதம் பேரெடு கூற்றில் எழுவாய கவும் சிற்றெடு கூற்றில் பயனிலையாகவும் வரும் நியாயத்தொடையே செம்மையான அறுதி நியாயத்தொடை என அரிஸ்ரோட்டிலிய அளவையியலாளர் கருதினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம்: எல்லாப்பட்டதாரிகளும் படித்த மனிதர் ஆவார் M—P (பேரெடுகூற்று)
எல்லா விரிவுரையாளரும் பட்டதாரிகள் ஆவார் S—M (சிற்றெடுகூற்று)

ஆகவே எல்லா விரிவுரையாளரும் படித்த மனிதர்ஆவார் ∴ S—P (முடிவு)

மேலே தந்த உதாரணத்தில் ஆகவேக்கு மேலே உள்ள இரண்டு எடுப்புகளையும் எடு கூற்றுக்கள் எனவும் அவற்றிலிருந்து தர்க்க ரீதியாக பெறப்பட்ட மூன்றுவது எடுப்பை முடிவு எனவும் அழைப்பர். எடுகூற்றுக்கள் இரண்டிற்கும் பொதுவாக இருக்கும் பதம் 'மத்தியபதம்' (MIDDLETERM) எனவும் முடிவின் பயனிலையாக வருவதை 'பெரும்பதம்' (MAJORTERM) எனவும் முடிவின் எழுவாயாக வருவதை 'சிறுபதம்' (MINORTERM) எனவும் அழைக்கப்படும் இவற்றை முறையே M, P, S, என குறியீட்டில் குறிப்பது வழக்கு. பெரும்பதத்தையும், மத்தியபதத்தையும் கொண்ட எடுகூற்றை பேரெடுகூற்று, எனவும் சிறு பதத்தையும் மத்திய பதத்தையும் கொண்ட எடுகூற்றை சிற்றெடுகூற்று எனவும் அழைக்கப்படும்.

2. அறுதி நியாயத்தொடையின் பொது விதிகள்:-

அ) (THE GENERAL RULES OF CATEGORICAL SYLLOGISM)

i) ஒரு நியாயத் தொடையில் மூன்று எடுப்புக்கள் மட்டுமே இருக்க வேண்டும்.

ii) ஒரு நியாயத்தொடையில் மூன்றுபதங்கள் மட்டுமே இருக்க வேண்டும்.

iii) எடுகூற்றுக்கள் ஒன்றிலாவது மத்திய பதம் வியாப்தி அடையவேண்டும்.

iv) எடுகூற்றுக்களில் வியாப்தி அடையாத எப்பதமும் முடிவு கூற்றில் வியாப்தி அடையக் கூடாது.

v) இரு மறை எடுப்புக்களில் இருந்து எத்தகைய முடிவினையும் அனுமானிக்க முடியாது.

vi) எடுகூற்றுக்களில் ஒன்று எதிர் மறையானால் முடிவும் எதிர்மறையாக இருக்க வேண்டும்.

இவ் ஆறுவிதிகளையும் பிரதான விதிகள் என அழைக்கப்படும் இவற்றில் முதல் இரண்டையும் 'அமைப்பு' விதிகள் எனவும் மூன்றும், நான்காம், விதிகளை 'வியாப்தி பற்றிய விதிகள் எனவும் ஐந்தாம், ஆறும் விதிகளை தன்மை பற்றிய விதிகள் எனவும் கொள்க. இவற்றைவிட மூன்று கிளைவிதிகளும் உள்ளன.

vii) இரு குறை எடுப்புக்களில் இருந்து எதுவித முடிவையும் அனுமானிக்க முடியாது,

viii) எடுகூற்றுக்களில் ஒன்று குறையானால் முடிவும் குறையாக இருக்க வேண்டும்

ix) பேரெடு கூற்று குறையாயும் சிற்றெடு கூற்று றையாகவும் இருப்பின் அவற்றிலிருந்து எவ்வித முடிவையும் அனுமானிக்க முடியாது

ஆ) விதிகளுக்குரிய விளக்கம்:-

விதி 1. ஒரு நியாயத்தொடையில் மூன்று எடுப்புக்கள் மட்டுமே காணப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். என்றவிதி நியாயத்தொடையின் இலக்கணத்தில் இருந்து பெறப்பட்டதாகும். தரப்பட்டவாத வடிவம் நியாயத் தொடை வடிவில் அமைந்துள்ளதா என்பதை அறிய இவ்விதி உதவும்.

விதி 2 ஒரு நியாயத்தொடையில் மூன்று பதங்கள் மட்டுமே இருத்தல் வேண்டும் என்றவிதி மீறப்படுமாயின் 'நாற்பதப் போலி' (FALLACY OF FOUR TERMS) ஏற்படும்.

உ-ம்: எல்லா பெட்டைக் கோழிகளும் முட்டையிலிருந்து வருவன.
எல்லா முட்டைகளும் பெட்டைக் கோழியிலிருந்து வருவன.
ஆகவே எல்லா முட்டைகளும் முட்டைகளில் இருந்து வருவன,

விதி 3 எடுகூற்றுக்கள் ஒன்றிலாவது மத்தியபதம் வியாப்தி அடைய வேண்டும் என்ற விதி மீறப்படின் 'மத்தியபதம் வியாப்தி அடையாப்போலி' (FALLCY OF UNDISTRIBUTED MIDDLE) ஏற்படும். ஏதாவது ஒரு எடுகூற்றில் மத்தியபதம் வியாப்தி அடையாவிடின் பெரும்பதம், சிறுபதம் என்பவற்றுக்கிடையோ தொடர்பை ஏற்படுத்த முடியாததுடன் எடுகூற்றுக்கள் இரண்டிலும் வெவ்வேறு பொருளையும் குறித்து நிற்கும். கீழ்வரும் உதாரணங்களில் (✓) என்பது பங்களின் வியாப்தியையும் (X) என்பது வியாப்தி இன்மையையும் குறிக்கிறது.

1. உ-ம் எல்லா (சைவ சமயத்தவரும்) (புலால் மறுப்பவராவார்) (A) — P ✓, M X
எல்லா (புத்த சமயத்தவரும்) (புலால் மறுப்பவராவார்) (A) — S ✓, M X
∴ எல்லா (புத்த சமயத்தவரும்) (சைவ சமயத்தவராவார்) (A) — S ✓, P X

2. சில (பாராளுமன்ற உறுப்பினர்) (பட்டதாரிகள்) ஆவார் (I) — M X, P X
எல்லா (அமைச்சர்களும்) (பாராளுமன்ற உறுப்பினராவார்) (A) — S ✓, M X
∴ எல்லா (அமைச்சர்களும்) (பட்டதாரிகளாவர்) (A) — S ✓, P X

மேலே தந்த இரு உதாரணங்களில் மத்தியபதம் வியாப்தி அடையவில்லை என்பதை மாணவர்கள் இலகுவாகக் கண்டறியலாம். கீழே தரப்படும் உதாரணம் மத்தியபதம் விதியை மீறாமல் இருப்பதைக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M ✓ P ✗
எல்லா (முதுகலை மாணிகளும்) (அறிவுடையோராவர்) (A)
S ✓ M ✗
எல்லா (விரிவுரையாளரும்) (முதுகலை மாணிகளாவார்) (A)
S ✓ P ✗
ஃ எல்லா (விரிவுரையாளரும்) (அறிவுடையோராவர்) (A)

விதி 4 எடுகூற்றுக்களில் வியாப்தி அடையா எப்பதமும் முடிவு கூற்றில் வியாப்தி அடையக் கூடாது, என்ற விதி மீறப்படுமாயின் பெரும்பத சட்டவிரோதப்போலி (FALLACY OF ILLICIT MAJOR) அல்லது சிறுபத சட்டவிரோதப்போலி (ILLICT MINOR) ஏற்படும்.

M ✓ P ✗
உ-ம்:- (தெளிவாய்ச் சிந்திப்பவர்) அனைவரும் (புத்தி உள்ளவர்கள் ஆவார்) (A)

S ✗ M ✗
1. சில (அளவையியலாளர்) (தெளிவாய் சிந்திப்போர்) ஆவார் (I)
S ✗ P ✓
ஃ சில (அளவையியலாளர்) (புத்தி உள்ளவர்கள்) அல்ல (O)

M ✓ P ✗
2. எல்லாப் (பாம்புகளும்) (நஞ்சுள்ளவையாகும்) (A)
M ✓ S ✗
எல்லாப் (பாம்புகளும்) (ஊர்வன) (A)
S ✓ P ✗
ஃ எல்லா (ஊர்வனவும்) (நஞ்சுள்ளவை) ஆகும் (A)

விதி 5. இரு எதிர்மறை எடுப்புக்களில் இருந்து எதுவித முடிவினையும் அனுமானிக்க முடியாது. என்ற விதியின்படி எடுகூற்றுக்கள் இரண்டும் எதிர்மறைகளாயின் பெரும்பதமோ அல்லது சிறுபதமோ மத்திய பதத்துடன் தொடர்புபட முடியாது. அதாவது ஏதாவது ஒரு எடுகூற்றில் மத்தியபதம் வியாப்தி அடைய வேண்டும். இதற்கு எடுகூற்றுக்களில் ஒன்று விதிஎடுப்பாக இருக்க வேண்டும். இவ்வாறு இல்லையெனின் இரு எதிர்மறை எடுகூற்றுப்போலி (FALLACY OF TWO NEGATIVS)

உ-ம்:- (E) உலோகங்கள் அல்லாதவை எவையேனும் புவியீர்க்கப்படுவன அல்ல
(E) ஈதர் ஒரு உலோகம் அல்ல
(E) ஃ ஈதர் புவியீர்க்கப்படுவது அல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NOUN பெயர்ச் சொல்

ஆள், இடம், பொருள் என்பவற்றையும் எண்ணம், கருத்து, பண்பு ஆகியவற்றையும் குறிப்பன பெயர்ச் சொற்கள் எனப்படும்.

உ-ம்: Kumar, Colombo, book
Pride, Strength, goodness
honesty, beauty, love.

## பண்புகள்

### 1. எண் காட்டுதல்

a. S பெற்றுப் பன்மை காட்டும்

உ-ம்: book - books, boy - boys
house - houses orange - oranges.

b. s, sh, ch, x ஆகியன ஈற்றில்வரின் es பெற்றுப் பன்மை காட்டும்.

உ-ம்: bus - buses. brush - brushes
match - matches, box - boxes.

c. o ஈற்றின் முன் உயிரெழுத்து வரின் S பெற்றும் மெய்யெழுத்து வரின் es பெற்றும் பன்மை காட்டும்.

உ-ம் ratio - ratios, radio - radios
hero - heroes, veto - vetoes

புறநடை: mosquito - mosquito + s/es
motto - motto + s/es
portico - portico + s/es

d. f, fe ஈற்றில் வரின் s பெற்றும் சில வேளைகளில் f, fe,ஆகியன v ஆக மாறி es பெற்றும் பன்மை காட்டும்.

proof - proofs, safe - safes, knife - knives, half - halves, leaf - leaves, thief - thieves. life - lives.

e. y ஈற்றுக்கு முன் மெய்யெழுத்துவரின் y iஆக மாறி es பெறும். y முன் உயி ரெழுத்துவரின் y மாறாது.

உ-ம் party - parties, library - libraries, monkey - monkeys

f. சில பெயர்ச் சொற்கள் பன்மை ரூபத்தில் இருந்தாலும் ஒருமையைக் குறிக்கும் (சில பன்மையையும் குறிக்கும்)

ஒருமை;- news, mathematics, civics, economics

பன்மை:- trousers, shorts thanks, aches.

g. சில பெயர்ச் சொற்கள் ஒருமையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் பன்மையாகவும் உபயோகிக்கப் படும்.

உ-ம் sheep, deer, hose, gross, series swine.

h. சில ஒழுங்கற்ற முறையில் பன்மை காட்டும்.

man – men, child – children, foot – feet, tooth – teeth, ox – oxen

## 2. பால் காட்டுதல்

a. முற்றாக புதியதொரு சொல் பெண் பால் காட்டுதல்

| உ-ம் ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| father | mother |
| brother | sister |
| bachelor | spinster |
| cock | hen |
| dog | bich |

b. ess, ine, trix ஆகிய பிற்சேர்க்கைகள் பெற்றுப் பெண்பால் காட்டும்

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| anthor | anthoress |
| manager | manageress |
| hero | heroine |
| executor | executrix |
| testator | testatrix |

c. ஒரு சொல்லை பெயர்ச்சொல்லின் முன்னல் அல்லது பின்னல் வைத்துப் பெண்பால் காட்டுதல்

| | |
|---|---|
| man – servant | maid – servant |
| grand father | grand mother |
| land lord | land lady |
| bull calf | cow calf |
| he goat | she goat |

## 3. உடைமையைக் காட்டுதல்

a. பெயர்ச்சொல் பன்மையைக் காட்ட s பெறினும் உடைமையைக் காட்ட இன்னுமொரு s பெறுது ' என்ற குறியீட்டை மாத்திரம் பெறும்.

This is a boy (ஆண்பால் ஒருமை)
These are boys (ஆண்பால் பன்மை)
This is a boys' Shirt (ஒரு பையனுடைய)
This is a boys' School (ஆண் பிள்ளைகளுக்கான பாடசாலை)

கவனிக்கவும்

உயிருள்ளவற்றிற்கு மாத்திரம் 's உபயோகிக்கப்படும் the cow's tail அல்லது tail of the cow எனவும் வரும். உயிரல்லாதனவற்றுக்கு legs of the table என மாத்திரம் வரும். எக்காரணங்கொண்டும் table's leg என வராது.

b. s இல் முடியும் பெயர்ச் சொல் ' குறியீட்டை s இன் பின் பெற்று உடைமைப் பொருளைக் காட்டும்.

Moses' Law - Jesus' Miracle

c. பல பெயர்கள் கூட்டாக வரின் கடைசியில் வரும் பெயரே ' என்ற குறியீட்டைப் பெறும்.

Hently and Palmer's buiscuit
Johnson and Johnson's powder
The chairman of the committee's report

d. house, school, shop போன்ற சொற்கள் சில சமயங்களில் வசனத்தில் வரா

உ-ம்: I am at my uncle's.
(uncle's house என வராது)
He is attending sti Peter's.
(st peter's school என வராது)
You can get this buiscuit at maliban's
(maliban's shop என வராது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது வெளியீடுகள்

❁ **வர்த்தகமும் - கணக்கியலும்** *(O/L)*

மாணவர்க்குரியது. பிரதி 7-50

❁ **வணிகமும் - நிதியும்** *(A/L)*

( இல, 4, 5 ஆகியன மட்டுமே உண்டு )

பிரதி 4–50

❁ **பொருளியல் வினவிடை** *(A/L)*

விசேட வெளியீடு பிரதி 7–50

❁ **வணிகம் (11 இதழ்கள்)**

குறிப்பு:– வணிகம் கடந்த இதழ்கள் சில மிகச் சொற்பமாகவே கைவசமுண்டு.

விபரங்களுக்கு:–

Editor
VANIHAM
113, POINTPEDRO ROAD,
NALLUR,
JFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REGISTERED AS A NEWS PAPER AT THE G. P. O. No: QJ/355/82

# வணிகம் VANIHAM

## நன்றி! நன்றி!! நன்றி !!

வணிகம் தனது முதலாவதுவயதைஇந்தஇதழுடன் பூர்த்தியாக்கி இரண்டாவது வயதில் காலடி எடுத்துவைக்கின்றது. ஒருவருடகாலமாக வணிகத்தினை வெளியிடு வதற்குப் பேருதவி புரிந்த ஆசிரியர்கள், மாணவர்கள், சந்தாதாரர்கள், விற்பனைப் பிரதி நிதிகள், நூல்நிலைய அதிகாரிகள், விளம்பரதாரர்கள், அச்சக உரிமையாளர், அச்சக ஊழியர்கள், அனைவருக்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் வதில் மிகமகிழ் வெய்துகின்றது.

வணிகம் இதழ்களுக்குச்சிறந்த ஆக்கங்களை உடனுக்குடன் வழங்கி அதனை பொலிவு றச் செய்த ஆக்ககருத்தாக்கள் அனைவருக்கும் வணிகம் தனது மனப்பூர்வவான நன்றி யைத் தெரிவித்துக் கொள்கின்றது.

வணிகம் இதழ்களின் அமைப்பு, ஆக்கங்களின் தொடர் என்பன தொடர்பில் உடனுக்குடன் ஆலோசனை அளித்துதவிய அறிவுசால் பெருமக்கள் அனைவருக்கும் வணிகம் தனது நன்றியைத் தெரிவிப்பதில்அகமகிழ்வெய்துகின்றது.

ஆ-ர்.

தொடர்பு: EDITOR
VANIHAM
113, POINT PEDRO ROAD,
NALLUR - JAFFNA.

### சிந்தனைக்கு

**சரியா? தவறு?**

விருப்புவெறுப்பற்ற இறைவனை விரும்புவதும் வெறுப்பதுவும் சரியா? தவறு?

ஆ-ர்.

அச்சுப்பதிவு: தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
வெளியீடு: கு. குணசிங்கம் B. Com. (Hons) சஞ்சிகை ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org